தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014-2015)

(பதினான்காவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 20 FEB 2015)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை-600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014–2015)

(பதினான்காவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

			பக்கம்
1.	2014–2015 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அமைப்பு	..	iii
2.	முகவுரை	..	v

இணைப்பு

1.	தொழில்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	அ. தமிழ்நாடு கிராபைட் நிறுவனம்	..	2009–2010 2010–2011	..	3
	ஆ. தமிழ்நாடு கனிம நிறுவனம்	..	2009–2010 2010–2011 2011–2012	..	4
	இ. தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்	..	2008–2009 2011–2012	..	5
2.	வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்	..	2009–2010 2010–2011	..	6
3.	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	அ. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்	..	2010–2011	..	7
	ஆ. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்	..	2010–2011	..	8
4.	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பின்வரும் நிறுவனத்தின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பட்டது குறித்து அத்துறை அளித்த விளக்கத்தின் மீதான குழுவின் பரிந்துரை				
	தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம்	..	2008–2009 2010–2011	..	9


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014–2015)

(பதினான்காவது பேரவை)

(2014–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13–ஆம் நாள் அமைக்கப்பெற்றது)

1. *தலைவர்*

   திரு. ஆர். சின்னசாமி

உறுப்பினர்கள்

2. திரு. ம. கலை அரசு
3. திருமதி ர. சுபா
4. திரு. கா. தமிழரசன்
5. திரு. என்எஸ்என். நடராஜ்
6. திரு. கே.பி. நாகராஜன்
7. திரு. V.P. நாகைமாலி
8. திரு. அ. பாஸ்கர்
9. டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்
10. திரு. இரா. மணிமாறன்
11. திரு. பொன். ராஜா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . . செயலாளர்

திருமதி கோ. காயத்ரி . . . கூடுதல் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன் . . . குழு அலுவலர்

திரு. ப. பத்மகுமார் . . . சார்புச் செயலாளர்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

(2014–2015)

(பதினான்காவது பேரவை)

ஐந்தாவது அறிக்கை

முகவுரை

2014–2015–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாக ஐந்தாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

2014–2015 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 13.8.2014 அன்று அமைக்கப்பெற்றது.

குழுக் கூட்டம்

தமிழ்நாடு கிராபைட் நிறுவனம், தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் ஆகியவற்றின் ஆண்டறிக்கைகள் பேரவைமுன் காலதாமதமாக வைக்கப்பெற்றது குறித்து சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் 2013–2014–ஆம் ஆண்டுக்காக அமைக்கப்பெற்ற குழுமுன் 24.7.2014 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக்கூட்டத்தில் விளக்கம் அளித்தனர். அக்குழுவின் நடவடிக்கைக் குறிப்புகள், கருத்துரைகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றை 2014–2015–ஆம் ஆண்டுக்காக அமைக்கப்பெற்ற இக்குழு பரிசீலித்து திருத்தங்கள் ஏதுமின்றி ஏற்பளித்தது. 13.01.2015–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

2. குழுவின் பணிகளுக்குப் பெரிதும் உதவிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களுக்குக் குழு தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சென்னை–600 009,
13.01.2015,
ஐய, மார்கழி 29,
திருவள்ளுவர் ஆண்டு–2045.

ஆர். சின்னசாமி
தலைவர்,
பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு

1. தொழில் துறை

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	தமிழ்நாடு கிராபைட் நிறுவனம்	2009–2010	31.03.2011–க்குள்	07.05.2012	1 வருடம் 1 மாதம் 6 நாட்கள்
		2010–2011	31.03.2012–க்குள்	01.11.2012	7 மாதங்கள்

துறையின் பதில்
(7)

தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் 2009–2010–ஆம் ஆண்டுக்கணக்குகள் தொகுத்து முடிப்பதில் நிறுவனத்தில் எவ்வித காலதாமதமும் ஏற்படவில்லை. மேற்படி நிறுவனத்தின் கணக்குகளை பொதுக்குழுக் கூட்டத்தில் வைத்து ஏற்பளிக்கப்பட்டபின், ஆண்டறிக்கையின் நகல்கள் 28.9.2010–ல் தான் அரசுக்கு வரப்பெற்றது. அரசுக்கு வந்த பிறகு அது குறித்து சில விளக்கங்கள் துறையால் கேட்கப்பட்டதால் இரண்டு, மூன்று மாதங்கள் காலதாமதமும் ஆண்டறிக்கை அச்சடித்து பெறப்பட்டதில் காலதாமதமும் ஏற்பட்டது. அதே போன்று 2010–2011–ஆம் ஆண்டு கணக்குகளுக்கான தணிக்கைச் சான்றிதழ் 27.9.2011–ல் பெறப்பட்டு 30.9.2011–ல் பொதுக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. எனினும் ஆண்டறிக்கையை அச்சடித்து பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. இனி வருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் நிகழாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

சட்டமன்றப் பேரவையில் ஆண்டறிக்கைகளை காலதாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு தேவையான அறிவுரைகளை அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் எனவும் ஆண்டறிக்கையினை பேரவைமுன் வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருப்பின் அதற்கான விவர அறிக்கையினை துறை சம்பந்தப்பட்ட அமைச்சரின் சான்றொப்பத்துடன் அறிக்கையுடன் இணைத்து அனுப்பப்பெற வேண்டும் எனவும் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற நிறுவனங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி, இனி வரக்கூடிய காலங்களில் இது போன்ற தவறுகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆ.	தமிழ்நாடு கனிம நிறுவனம்	2009–2010	31.03.2011–க்குள்	25.04.2012	1 வருடம் 24 நாட்கள்
		2010–2011	31.03.2012–க்குள்	1.11.2012	7 மாதங்கள்
		2011–2012	31.03.2013–க்குள்	17.2.2014	10 மாதங்கள் 16 நாட்கள்

துறையின் பதில்
(7)

மாநில கணக்காய்வுத் துறையின் தணிக்கைச் சான்றிதழ் பெறுவதிலும், அறிக்கைகள் அச்சடித்து வருவதில் முறையாக தொடர் கண்காணிப்பு இல்லாததாலும் சட்டமன்றத்தில் ஆண்ட்றிக்கைகள் வைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. இனி வருங்காலங்களில் தாமதம் ஏற்படாமல் இருப்பதற்கும், காலதாமதத்திற்கான விவர அறிக்கை வைப்பதற்கும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

2009–2010–ஆம் ஆண்டுக்குப் பிறகு ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் வைப்பது முறையாக பின்பற்றப்படவில்லை என்பதை குழு கவனத்தில் கொண்டது. தொழில் துறையின் கட்டுப்பாட்டில் பல நிறுவனங்கள் செயல்படும் நிலையில் ஆண்டறிக்கைகளை பேரவைக்கு சமர்ப்பித்தல் குறித்த சரியான வழிகாட்டுதல்களையும் வழிமுறைகளையும் நிறுவனங்களுக்கு வழங்கும் வகையில் துணைச் செயலாளர் பதவி நிலையில் தனித்தொரு ஒருங்கிணைந்த அலுவலரை (Nodal Officer) நியமனம் செய்ய வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
இ.	தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்	2008–2009	31.03.2010–க்குள்	10.02.2011	10 மாதங்கள் 9 நாட்கள்
		2011–2012	31.03.2013–க்குள்	18.2.2014	10 மாதங்கள் 17 நாட்கள்

துறையின் பதில்
(7)

இனி வருங்காலங்களில் முறையாக ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என்ற உறுதியினை அளிப்பதோடு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

தொழில் துறையின் கட்டுப்பாட்டில் பல நிறுவனங்கள் இயங்குவதால் ஆண்டறிக்கைகள்/தணிக்கை அறிக்கைகள் காலதாமதமின்றி சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சரியான வழிகாட்டுதல்களும், வழிமுறைகளும் தெரிவிப்பதற்கு துணைச் செயலாளர் பதவி நிலையில் ஒருங்கிணைந்த அலுவலர் (Nodal Officer) ஒருவரை நியமிக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

வரிசை எண்.	குழுமத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்	2009–2010	31.03.2011–க்குள்	16.04.2012	1 வருடம் 15 நாட்கள்
		2010–2011	31.03.2012–க்குள்	1.4.2013	1 வருடம்

துறையின் பதில் (7)	குழுவின் பரிந்துரை (8)
நிறுவனத்தின் ஆண்டறிக்கையை தயார் செய்த பிறகு அதனை தணிக்கை செய்வதிலும், வருடாந்திர பொதுக்குழுக் கூட்டம் நடத்தி முடிப்பதிலும் காலதாமதம் ஆகிறது. இருப்பினும், ஆண்டறிக்கை தணிக்கை செய்யப்பட்டு, குறித்த காலத்திற்குள் சட்டமன்றப் பேரவைக்குச் சமர்ப்பிக்க இயலும். இதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை துறை ஒப்புக் கொள்வதோடு, இனி வருங்காலங்களில் தாமதம் ஏற்படாவண்ணம் ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.	துறையின் கீழ் செயல்படும் பொது நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள் சட்டமன்றப் பேரவையில் உரிய காலத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக தங்கள் துறையில் துணைச் செயலாளர் நிலையில் ஒருங்கிணைந்த அலுவலர் ஒருவரை நியமித்து சம்பந்தப்பட்ட துறையின் கீழ் எந்தெந்த நிறுவனங்கள் வருகிறதோ, அந்த நிறுவனங்களோடு சேர்ந்து பணிகளை மேற்கொண்டு, ஆண்டறிக்கைகளை காலதாமதமின்றி சட்டமன்றத்தில் வைப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

3. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

வரிசை எண்.	நிறுவனத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
அ.	அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்	2010–2011	31.03.2012–க்குள்	31.10.2012	7 மாதங்கள்

துறையின் பதில் (7)	குழுவின் பரிந்துரை (8)
அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் 2010–2011–ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை 31.3.2012 அன்று பேரவையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். 7 மாதங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளது. இனி வருங்காலங்களில் இது போன்ற காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2010–2011–ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை சட்டமன்றப் பேரவையில் வைத்ததில் 7 மாதங்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. காலதாமதம் ஏற்படும் நிகழ்வுகளில், அதற்குண்டான விவர அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஆண்டறிக்கையுடன் இணைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	வாரியத்தின் பெயர்	நிதியாண்டு	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள்	காலதாமத விவரம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
ஆ.	தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்	2010–2011	31.03.2012–க்குள்	15.5.2013	1 வருடம் 1 மாதம் 14 நாட்கள்

துறையின் பதில் (7)	குழுவின் பரிந்துரை (8)
தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 2010–2011–ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு வாரியம் (Board) தான் காரணம். இனி வருங்காலங்களில் குறித்த காலத்தில் அறிக்கைகளை பேரவையில் வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	ஆண்டறிக்கையை, உரிய காலத்தில் பேரவையில் வைக்க வேண்டும் எனவும் தவிர்க்க முடியாத காரணங்களினால் தாமதம் ஏற்படும் நேர்வுகளில் தாமதத்திற்கான காரணம் குறித்த விவர அறிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஆண்டறிக்கையுடன் இணைக்க வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

வரிசை எண். (1)	கழகத்தின் பெயர் (2)	நிதியாண்டு (3)	பேரவைமுன் வைக்கப்பட வேண்டிய கால அளவு (4)	பேரவைமுன் வைக்கப்பட்ட நாள் (5)	காலதாமத விவரம் (6)
அ.	தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம்	2008–2009	31.03.2010–க்குள்	13.1.2011	9 மாதங்கள் 12 நாட்கள்
		2010–2011	31.03.2012–க்குள்	31.10.2012	7 மாதங்கள்

துறையின் பதில்
(7)

ஆண்டறிக்கையுடன் விவர அறிக்கை வைக்காதது தவறு என்பதை துறை உணர்கிறது. குறிப்பாக, 2008–2009–ஆம் வருடத்தை பொறுத்தவரையில், Raina Pharmaceuticals Limited என்ற நிறுவனம் Disputed Liability-க்கு பதிலாக Contingent Liability என்று காண்பித்த காரணத்தினால் clarification கேட்டு Ministry of Corporate Affairs வரைக்கும் அனுப்ப வேண்டியதாயிற்று. மேலும் கணக்காயர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களிடம் பெறுவதில் இன்னும் காலதாமதம் ஏற்பட்டது. Board-ல் வைத்து, அதன் ஒப்புதல் பெறுவதிலும் காலதாமதம் ஏற்பட்டது. இந்த விவரங்களை எல்லாம் விவர அறிக்கையில் கொண்டு வந்திருக்க வேண்டும். கவனக் குறைவினால் தவறு ஏற்பட்டுவிட்டது. இனி வருங்காலங்களில், இது போன்ற தவறுகள் ஏற்படாதவாறு துறை கவனமாக செயல்படும்.

குழுவின் பரிந்துரை
(8)

நிதித்துறையிலிருந்து, அனைத்து துறைகளுக்கும் ஏற்கெனவே அனுப்பப்–பட்டுள்ள அறிவுரையின்படி, துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறும், வருங்காலங்–களில் காலதாமதமின்றி ஆண்டறிக்கையை பேரவையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.


தமிழ்நாடு சட்டமன்ற பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS